RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 320 | நவம்பர்.20 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## திமுகவுக்காக அதிமுகவை காத்திருப்பில் வைக்கிறதா தேமுதிக?

சென்னை, நவ.20-

"எங்கள் கூட்டணிக்கு இன்னும் சில கட்சிகள் வரவிருக்கின்றன" என சேலத்தில் இபிஎஸ்ஸை சந்தித்துப் பேசிய பிறகு ஜி.கே.வாசன் பேட்டியளித்த அதேநேரத்தில் மதுரையில், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்தை எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் 'மரியாதை நிமித்தமாக' சந்தித்துப் பேசியது பல்வேறு ஊகங்களை விதைத்து விட்டிருக்கிறது.

தேமுதிக வாக்குச் சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்காக கடந்த 17ம் தேதி மதுரை வந்திருந்தார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த். இந்த நிகழ்ச்சியில் தான் பிரேமலதாவை உதயகுமார் திடீரென சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பு முடிந்தவுடன், "அதிமுகவுடன் தேமுதிக கூட்டணி சேர வாய்ப்பு இருக்கிறதா... இந்த சந்திப்பு அதற்கான அச்சாரமா?" என செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மழுப்பலாகவே பதிலளித்த பிரேமலதா, "கூட்டணி சிதம்பர ரகசியமா என்ன? ரகசியம் என்பதே தேமுதிக வரலாற்றில் கிடையாது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுமே எங்களுக்கு தோழமைக் கட்சிகள்தான்.

அவர்கள் எல்லோருமே தேமுதிகவுடன் கூட்டணி வைக்க ஆர்வமாக உள்ளனர். என்றாலும் மாவட்டச் செயலாளர்களையும், நிர்வாகிகளையும் அழைத்துப் பேசி மக்கள் மனநிலையையும் ஆராய்ந்து நாங்கள் நிச்சயமாக நல்ல முடிவை எடுப்போம்" என்றார்.

அப்போதும் விடாத செய்தியாளர்கள், "திடீரென ஆர்.பி.உதயகுமார் உங்களை வந்து சந்தித்திருக்கிறாரே..?" என்று கேட்டதற்கு, "இவங்க கூட தான் கூட்டணி... அவங்க கூட தான் கூட்டணி என்று நாங்கள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. எங்கம்மாவின் மறைவுக்கு அனைத்து தலைவர்களும் வந்து இறுதி மரியாதை செலுத்தினார்கள். பிரதமரும் இரங்கல் தெரிவித்தார். அந்த அடிப்படையில் தான் உதயகுமாரும் இன்று என்னை சந்தித்து துக்கம் விசாரித்தார்" என்றார்.

பிரேலதாவை சந்திக்கும் முன்பாக, தேமுதிக கூட்டம் நடந்த மண்டபத்தின் ஓர் அறையில் சுமார் அரை மணி நேரத்துக்கும் மேலாக உதயகுமார் காத்திருந்தார். கட்சிக் கூட்டத்தை முடித்துவிட்டு வந்து அவரை சந்தித்த பிரேமலதா, உதயகுமாரை உட்கார வைத்துக் கூட பேசாமல் நிற்க வைத்தே சுமார் 5 நிமிடங்கள் பேசிவிட்டு அவரை வழியனுப்பி வைத்தார்.

பிரேமலதாவை மரியாதை நிமித்தமாக சந்திக்கும்படி இபிஎஸ் தன்னை அனுப்பி வைத்ததாக உதயகுமாரே செய்தியாளர்கள் சந்திப்பில் வெளிப்படையாகச் சொன்னார். இருந்த போதும், இப்போதைக்கு யாருக்கும் பிடிகொடுத்துவிட வேண்டாம் என்ற முன் ஜாக்கிரதையுடன் உதயகுமாரை 'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற ரேஞ்சில் நிற்கவைத்தே பேசி அனுப்பி இருக்கிறார் பிரேமலதா.

இதுகுறித்து நம்மிடம் பேசிய மதுரை அதிமுக நிர்வாகிகள் சிலர், "மரியாதை நிமித்தமாக தன்னைச் சந்திக்க வந்த உதயகுமாரை பிரேமலதா தனியாகச் சந்தித்துப் பேசி இருக்கலாம். அல்லது 2 நாட்கள் மதுரையில் இருந்த அவரை யாருக்கும் தெரியாமலாவது போய் சந்தித்திருக்கலாம் உதயகுமார். ஆனால், அதற்கான வாய்ப்பை பிரேமலதா கொடுக்கவில்லை எனத் தெரிகிறது. ஒருவேளை, அதிமுக தங்களது தயவை தேடுகிறது என வெளியில் தெரியவேண்டும் என பிரேமலதா நினைத்தாரோ என்னவோ.

மக்களவைத் தேர்தலில் விருதுநகரில் போட்டியிட்ட விஜய பிரபாகரனுக்காக உதயகுமார் மிகக் கடுமையாக உழைத்தார். அதனால் தான் அவரை பேச்சுவார்த்தைக்கு அனுப்பி இருக்கிறார் இபிஎஸ். ஆனால் பிரேமலதா, திமுக சைடிலும் பேசிக்கொண்டு இருப்பார் போலிருக்கிறது. அதனால் தான் உதயகுமாரை பட்டும் படாமல் பேசி அனுப்பி இருக்கிறார்" என்றனர்.

தேமுதிக நிர்வாகிகளோ, "ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் உதயகுமார் வந்துவிட்டார். அதனால், அவரை எங்கள் பொதுச்செயலாளர் கூட்டம் முடிந்து வந்து சந்தித்தார். இருவரும் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளுக்கு போக வேண்டி இருந்ததால் உட்கார்ந்து பேச நேரமில்லாமல் நின்று கொண்டே பேசினர்" என்றார்கள்.

## தீவிரவாதத்தை உலக நாடுகள் சகித்துக் கொள்ளக் கூடாது: அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தல்

புதுடெல்லி, நவ.20-

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் (எஸ்சிஓ) உள்ள நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் நடைபெற்றது. இதில் மத்திய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கலந்துகொண்டு பேசியதாவது:



தீவிரவாதம், பிரிவினைவாதம், இனவாதம் ஆகிய மூன்று தீமைகளை எதிர்த்துப் போரிட எஸ்சிஓ அமைப்பு உருவாக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக உலகின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாத அச்சுறுத்தல்கள் அதிகமாகிவிட்டன.

தீவிரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் நாம் அதை வேரறுக்கவேண்டும். தீவிரவாதத்துக்கு எதிராக நாம் சகிப்புத்தன்மையைக் காட்டக்கூடாது.

தீவிரவாதத்தின் மீது பூஜ்ஜிய சகிப்புத்தன்மையை நாம் காட்டுவது கட்டாயமாகும். இதிலிருந்து எந்த நாடும் விலகிச் செல்லவும் முடியாது. திரும்பிப் பார்க்கவும் முடியாது. டெல்லி குண்டுவெடிப்பு சம்பவத்துக்குப் பிறகு, தீவிரவாதத்துக்கு எதிராக எங்களது மக்களைப் பாதுகாக்கும் உரிமை உண்டு.

தீவிரவாதத்தை வேரறுக்க ஒன்றுபட்டு செயல்படுவோம். மாறி வரும் உலகளாவிய நிலப்பரப்புக்கு ஏற்ப ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பை (எஸ்சிஓ) நாம் மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# கோவையில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு

கோவை: நவ.20-

தென்னிந்திய இயற்கை விவசாயிகள் மாநாட்டை தொடங்கி வைக்க கோவை வந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சாலையின் இருபுறங்களிலும் தொண்டர்களும் பொதுமக்களும் பெருமளவில் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர்.



கோவை அவிநாசி சாலையில் அமைந்துள்ள கொடிசியா அரங்கில் நடைபெறும் தென்னிந்திய இயற்கை விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்க கோவை வந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கோவை விமான நிலையத்தில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, மத்திய இணையமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தமாகா தலைவர் ஜி.கே.வாசன், பாஜக தமிழக முன்னாள் தலைவர் அண்ணாமலை, பாஜக தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

தொடர்ந்து விமான நிலையம் முதல் கொடிசியா கண்காட்சி அரங்கம் வரை சாலையின் இருபுறங்களிலும் தொண்டர்கள், பொதுமக்கள் அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு அவர்களை நோக்கி கையசைத்தபடியே பிரதமர் காரில் சென்றார்.

பின்னர், கொடிசியா வளாகத்தில் இயற்கை விவசாயிகள் மாநாடு 2025ஐ பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இயற்கை விவசாயிகள் உற்பத்தி செய்த விளை பொருட்களை பார்வையிட்ட பிரதமர், விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

## மண்ணை கவ்விய காங்., திமுக எடுத்த திடீர் முடிவு! ராயப்பேட்டைக்கு வண்டியை விடும் விஜய்! பரபர ட்விஸ்ட்!

சென்னை, நவ.20-

விஜயை வைத்து திமுகவிடம் கூட்டணி பேரத்தை அதிகரிக்கலாம் என காத்திருந்த காங்கிரசுக்கு ஏமாற்றமே மிஞ்சி உள்ளது. 2026 தேர்தலில் காங்கிரஸ் திமுகவை விட்டு விலகாது என்கின்றனர் தேசிய தலைவர்கள். இந்த நிலையில் சீமானை போல சிறிது சிறிதாக வாக்கு வங்கியை உயர்த்த விரும்பாத விஜய் 'ஸ்ட்ரெயிட்டா சிஎம்' என்பது போல அதிமுகவுடன் கூட்டணி வைக்க தயாராகி உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதற்காக அவரிடம் ஆந்திர மாடலை எடுத்துக் கூறியுள்ளனர் சில நிர்வாகிகள்.



2026 சட்டமன்ற தேர்தல் களம் எந்த கட்சிக்கும் அவ்வளவு எளிதாக இருக்காது என்று தான் சொல்லப்படுகிறது. காரணம் பெரும் கூட்டணி பலத்துடன் இருக்கும் திமுக மீண்டும் ஆட்சி அமைக்க தயாராகி வருகிறது. அதே நேரத்தில் ஆளுங்கட்சிக்கு எதிரான மனநிலை, சட்டம் ஒழுங்கு என பல பிரச்சனைகளை எடுத்து வைத்து அக்கட்சியை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என அதிமுக முயன்று வருகிறது.

இதற்காக தேர்தலுக்கு பல மாதங்களுக்கு முன்பே பாஜகவுடன் கூட்டணியும் அமைத்தது. இனிமேல் பாஜகவுடன் கூட்டணியே கிடையாது என பேசிய எடப்பாடி பழனிச்சாமி மக்களவைத் தேர்தலில் வாங்கிய அடியால் மீண்டும் அந்த கட்சியுடன் கூட்டணி அமைத்திருக்கிறார். அதிமுக கூட்டணி கூடுதலாக தமிழக வெற்றிக்காக விஜய் வரவால் ஆளும் கட்சிக்கும், ஆண்ட கட்சிக்கும் பிரச்சனை எழுந்துள்ளது. ஆளுங்கட்சிக்கு எதிரான வாக்குகள் உள்ளிட்டவை பிரியும் என்பதால், அது அதிமுக கூட்டணிக்கு சிக்கலாக அமையும். மேலும் சிறுபான்மை வாக்குகள், இளைஞர் வாக்குகள், பெண்கள் வாக்குகள் என திமுகவின் 'கோர்' ஓட்டு வங்கி விஜய்க்கு செல்லலாம் எனவும் கணிக்கப்படுகிறது. விஜய்க்கு 20 சதவீதம் வரை ஆதரவு இருப்பதாக சொல்லப்படும் நிலையில் விஜய் தனித்து களமிறங்குவார் என தமிழக வெற்றி கழகத்தினர் கூறி வருகின்றனர்.

விஜய் கூட்டணி சொன்னது போலவே கடந்த பொதுக்குழுவிலும் விஜய் தான் முதல்வர் வேட்பாளர் என தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ஆனால், சமீபத்திய அரசியல் நிகழ்வுகள் விஜய்க்கு சாதகமாக அமையவில்லை. இதனால் கூட்டணி வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என விஜய் திட்டமிட்டு வருவதாக சொல்லப்படுகிறது. காரணம் காங்கிரஸ் உடன் கூட்டணி அமைக்கலாம் என விஜய் தரப்பு முயன்றது. கடந்த காலங்களில் ராகுலுடன் நெருக்கமாக இருந்தவர் விஜய். சில காங்கிரஸ் தலைவர்களும் விஜய்க்கு ஆதரவாகவே பேசி வருகின்றனர். ஆனால் உண்மையான நிலவரம் வேறு. காங்கிரஸ் அதிர்ச்சி அதிக இடங்களில் போட்டியிட்ட போதெல்லாம் காங்கிரஸ் தோற்று இருக்கிறது. பிற மாநிலங்களைப் போல தமிழகத்திலும் தோற்றால் காங்கிரஸ் கட்சிக்கு மிகப்பெரிய பின்னடைவாக கருதப்படும். எனவே 2026 தேர்தலில் கடந்த முறை போல 25 தொகுதிகளில் போட்டுவிட்டு 15க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பெற்றாலே போதும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் மனநிலை. செல்வபெருந்தகையும் அதனையே எதிரொலிக்கிறார். தலைமையிடமும் இதை எடுத்துச் சொல்லி நிலையில் ராகுல் காந்தியும் அதனை ஏற்றுக் கொண்டதாக சொல்லப்படுகிறது.

ராகுல் விஜய் சந்திப்பு மேலும் பீகார் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் காங்கிரஸின் செல்வாக்கு தேசிய அளவில் சரிந்து இருக்கும் நிலையில் விஜய்யும் அந்த கட்சியுடன் கூட்டணி சேரும் முடிவை தள்ளிப் போட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. இதனால் விஜய் ராகுல் காந்தி சந்திப்பு தள்ளிப் போக இருப்பதாகச் சொல்கின்றனர் அவரது ஆதரவாளர்கள். அதே நேரத்தில் கூட்டணி குறித்த சில வாய்ப்புகளை மறுபரிசீலனை செய்ய திட்டமிட்டு இருக்கிறார் விஜய். அந்த வகையில் திமுகவை வீழ்த்த அதிமுகவுடன் கூட்டணி சேரலாமா என விஜய் ஆய்வு நடத்தி வருவதாக சொல்லப்படுகிறது. ஆளும் கட்சி கட்சிக்கு எதிரான வாக்குகள் சிதறாது என்றாலும், பாஜகவுடன் கூட்டணி சேர்ந்தால் தனக்கு வரும் சிறுபான்மை வாக்குகள் குறைந்து விடும் என்பதையும் விஜய் கவனித்து வருகிறார். தவெக வியூகம் மேலும் துணை முதல்வர் பதவி 50 சீட்டுகள் என அதிமுகவுடன் பேரம் பேச திட்டமிட்டு இருந்தாலும் பாஜக கூட்டணியில் இருப்பது மட்டுமே விஜய்க்கு நெருக்கடியாக பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் ஆந்திர மாடலில் ஜெகன்மோகன் ரெட்டியை வீழ்த்த பாஜக சந்திரபாபு நாயுடு பவன் கல்யாண் சேர்ந்தது போல, தற்போது திமுகவை ஆட்சியில் இருந்த அகற்ற பாஜக அதிமுக விஜய் சேரலாம் என அவரது ஆதரவாளர்கள் பேசியதாக சொல்லப்படுகிறது. நாம் பாஜகவுடன் கூட்டணி வைக்க வேண்டாம், அதிமுகவுடன் கூட்டணி வைக்கலாம் எனவும் சில நிர்வாகிகள் விஜயை உசுப்பேற்றிய நிலையில் அது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது. எது எப்படி எனினும் இன்னும் சில நாட்களில் விஜய் கூட்டணி தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடுவார் என்கின்றனர் அவரது ஆதரவாளர்கள்.

## ஆந்திர வனப்பகுதியில் 7 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொலை

அமராவதி, நவ.20-

ஆந்திரப் பிரதேசத்தின் மாரேடுமில்லி காடுகளில் பதுங்கியிருந்த மாவோயிஸ்டுகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் 7 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர். கடந்த 24 மணி நேரத்தில் ஆந்திராவில் நடந்த இரண்டாவது துப்பாக்கிச்சூடு இது.




இந்த துப்பாக்கிச்சூடு தொடர்பாக விஜயவாடாவில் செய்தியாளர்களிடம் பேசிய கூடுதல் டிஜிபி மகேஷ் சந்திர லத்தா, "ஆந்திரப் பிரதேசத்தின் அல்லூரி சீதாராம ராஜு மாவட்டத்தில் உள்ள மாரேடுமில்லி காடுகளில், தடைசெய்யப்பட்ட சிபிஐ (மாவோயிஸ்ட்) இயக்கத்தைச் சேர்ந்த மாவோயிஸ்டுகள் பதுங்கி இருப்பது குறித்து தகவல் கிடைத்தது. இதையடுத்து, நேற்று நடைபெற்ற தேடுதல் வேட்டையின்போது, மாவோயிஸ்ட் அமைப்பின் முக்கிய தலைவர் மாத்வி ஹித்மா அவரது மனைவி மதகம் ராஜே உள்ளிட்ட 6 பேர் கொல்லப்பட்டனர். இந்த மோதலின்போது சில மாவோயிஸ்டுகள் தப்பிவிட்டனர்.

இந்நிலையில், தொடர்ந்து நடைபெற்ற தேடுதல் வேட்டையின்போது இன்று காலை 7 மணி அளவில் நடைபெற்ற மோதலில், 7 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர். இவர்களில், 3 பேர் பெண் மாவோயிஸ்டுகள், 4 பேர் ஆண் மாவோயிஸ்டுகள்.

சிபிஐ (மாவோயிஸ்ட்) அமைப்பின் ஆந்திர ஒடிசா எல்லை பகுதிக்கான மத்தியக் குழு பொறுப்பாளரான டெக் சங்கர் என அழைக்கப்படும் மேட்டூரி ஜோகா ராவ் இந்த மோதலில் கொல்லப்பட்டார். இவர் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவராக இருந்துள்ளார். மற்றவர்கள் குறித்து அடையாளம் காணப்பட்டு வருகிறது. தொடர்ந்து அங்கு தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது." என தெரிவித்தார்.

## ‘எங்களுக்கு 12 தொகுதிகள் வேண்டும்’ பழனிசாமியிடம் பந்திக்கு முந்திய ஜி.கே.வாசன்



சென்னை, நவ.20-

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியை சேலத்தில் உள்ள அவரது இல்லத்தில் ஜி.கே.வாசன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். அப்போது, அங்கிருந்த கட்சியினரை தவிர்த்து விட்டு இருவர் மட்டும் சுமார் 45 நிமிடங்கள் தனியாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த பேச்சுவார்த்தையின்போது, வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தமாகாவுக்கு கூடுதல் இடங்களை ஒதுக்க வேண்டி பழனிசாமியிடம் ஜி.கே. வாசன் வலியுறுத்தியதாக தகவல் கசிந்துள்ளது.

இதுகுறித்து சேலம் அதிமுக நிர்வாகிகள் நம்மிடம் பேசுகையில், “கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் அங்கம் வகித்த தமாகாவுக்கு 6 சீட் ஒதுக்கப்பட்டது. தொடர்ந்து அதிமுகவுடனும் பாஜகவுடனும் நல்லுறவைப் பேணி வரும் ஜி.கே.வாசன், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் கூடுதல் இடங்களை ஒதுக்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கையுடனே எங்கள் பொதுச் செயலாளரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

பொதுச் செயலாளருடனான பேச்சுவார்த்தையின் போது, தமிழகத்தில் 4 மண்டலங்களிலும் பரவலாக தமாகா வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்த வேண்டும் என்ற முனைப்பை ஜி.கே.வாசன் காட்டியுள்ளார்.

இதன்படி, தஞ்சை, அரியலூர், திருச்சி, சேலம், ஈரோடு, திருநெல்வேலி, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் தனது தீவிர ஆதரவாளர்களுக்காக வரும் தேர்தலில் 12 சீட்களை ஒதுக்க வேண்டும் என எங்கள் பொதுச்செயலாளரிடம் அவர் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து அதிமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிற கட்சி தலைவர்களுடன் பேச வேண்டும் என்பதால் ஜி.கே. வாசனின் கோரிக்கையை மறுத்துப் பேசாமல் கேட்டுக் கொண்டிருக்கிறார் எங்கள் பொதுச்செயலாளர்.

கடந்த முறை 6 தொகுதிகளில் போட்டியிட்ட தமாகா ஒரு தொகுதியில் கூட ஜெயிக்காத நிலையில், இம்முறை 12 தொகுதிகளைக் கேட்கிறது. வாசன் கேட்ட 12 தொகுதிகளை அதிமுக தர யோசித்தால் அடுத்ததாக பாஜக தலைவர்களிடமும் பேசி தனக்கானதை சாதிக்க நினைப்பார் வாசன்” என்றனர்.

## ஆளாளுக்கு கிளம்பிட்டாங்களே! திமுகஅதிமுகவுக்கு குடைச்சல் கொடுக்கும் கூட்டணி! 2026ல் பீகார் மாடலா?



சென்னை, நவ.20-

சமீபகாலமாகவே ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற குரல் தமிழகத்தில் கேட்க தொடங்கி இருக்கிறது. அதிமுக கூட்டணியில் பாஜக, கூட்டணிக்கு வரலாம் என சொல்லப்படும் பாஜக, தேமுதிக, திமுக கூட்டணியில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் என ஆளாளுக்கு கூட்டணியில் கூடுதல் சீட், ஆட்சி அதிகாரத்தில் பங்கு என பேசி வருவது கூட்டணிக்கு தலைமை தாங்கும் கட்சிகளை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது. ஆனால், பீகார், ஆந்திராவைப் போல கூட்டணி ஆட்சி தமிழகத்தில் மலர சாத்தியமில்லை என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

2026 சட்டமன்ற தேர்தலுக்கு தமிழ்நாடு தயாராகி வரும் நிலையில் கூட்டணியை பலப்படுத்தும் முயற்சிகளில் அதிமுக ஈடுபட்டுள்ளது. பாமக, அதிமுக கூட்டணிக்கு வருவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்ட நிலையில், தேமுதிக பிடி கொடுக்காமல் பேசி வருகிறது. கடந்த மாநிலங்களவை தேர்தலில் தேமுதிகவுக்கு ஒரு சீட்டை ஒதுக்காததால் தான் பிரேமலதா விஜயகாந்த் அதிருப்தியில் இருக்கிறார். கடந்த காலங்களில் திமுகவை மிகக் கடுமையாக விமர்சித்து வந்த அவர் தற்போது மோதல் போக்கை கைவிட்டு இணக்கமாக பேசி வருகிறார். தமிழக அரசியல் இடையில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்ததும் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் கடந்த சில மாதங்களாகவே ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற கோரிக்கை தமிழகத்தில் வலுத்து வருகிறது. ஆந்திரா, பீகார், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் மாநிலக் கட்சிகளை உடைத்து புது கூட்டணி அமைத்த பாஜக அங்கெல்லாம் ஆட்சியில் பங்கெடுத்து உள்ளது. இந்த நிலையில் தமிழகத்திலும் கூட்டணி ஆட்சி என பாஜக தலைவர்கள் பேசி வருகிறார்கள்.

பாமக தேமுதிக இதற்கிடையே தொண்டர்களை சந்தித்து வரும் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், அடுத்த ஆண்டு நீங்கள் எல்லாம் அமைச்சராக போகிறீர்கள் என பேசி தொண்டர்களை உற்சாகப்படுத்து வருகின்றனர். திமுக கூட்டணியிலும், தங்கள் பங்குக்கு காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு, கூடுதல் இடங்களை கேட்போம் என பேசி வருகின்றனர். இப்படி கூட்டணி கட்சிகள் இதுவரை இல்லாத அளவு முழக்கத்தை முன்னெடுத்து இருப்பதால் தலைமை தாங்கும் கட்சிகள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளன.

ஆட்சி அதிகாரத்தில் பங்கு ஆனால் தமிழகத்தில் தற்போதைய சூழலில் கூட்டணி ஆட்சிக்கு வாய்ப்பில்லை என்று சொல்கின்றனர். திமுகவோ, அதிமுகவோ தனித்து போட்டியிட்டாலும், கூட்டணி அமைத்து போட்டியிட்டாலும் பெரும்பாலான தொகுதிகளில் வெற்றி பெற்று தனித்து ஆட்சியைப் பிடித்திருக்கின்றன. திமுகவுக்கு போதிய சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாத போது கூட சில கட்சிகள் வெளியில் இருந்து தான் ஆதரவு அளித்தனர். கூட்டணி ஆட்சிக்கு திமுக சம்மதிக்கவும் இல்லை. அதிமுகவும் அப்படித்தான் காங்கிரஸ் காலத்திலும் சரி அதற்கு பிறகு அதிமுக, திமுக ஆட்சி காலங்களிலும் கூட்டணி ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை.

கூட்டணி ஆட்சி ஆனால், “பீகார் ஃபார்முலாவை தமிழ்நாட்டில் புகுத்த பாஜக துடிக்கிறது. அதிமுகவை பலவீனமாக்கி குறைந்த தொகுதிகளில் வெற்றி பெற செய்து ஆட்சியில் பங்கெடுக்கலாம் என்பதுதான் பாஜகவின் எண்ணம். ஆனால் தமிழகத்தை பொறுத்தவரை எந்த கட்சியாக இருந்தாலும் பலத்த ஆதரவை தருவார்கள். எதிர்க்கட்சியை ஓட விடுவார்கள் என்பது தான் வரலாறு. கூட்டணி ஆட்சிக்கு தமிழகத்தில் சாத்தியம் இல்லை. தற்போது மட்டுமல்ல எப்போதுமே சாத்தியமில்லை” என்கின்றனர் தமிழக அரசியலை நுட்பமாக கவனித்து வரும் அரசியல் பார்வையாளர்கள்.

## ரேஷனில் சானிட்டரி நாப்கின் மானிய விலையில் தரக்கோரிய வழக்கு! அரசுக்கு ஐகோர்ட் முக்கிய உத்தரவு

சென்னை, நவ.20-

ரேஷன் கடைகளில், சானிட்டரி நாப்கின்களை மானிய விலையிலோ, இலவசமாகவோ வழங்கக் கோரிய வழக்கில், டிசம்பர் 16 ம் தேதிக்குள் பதிலளிக்காவிட்டால், சுகாதாரத் துறை உள்ளிட்ட மூன்று துறை செயலாளர்கள் நேரில் ஆஜராக வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தின் அனைத்து ரேஷன் கடைகளிலும் மக்கள் அத்தியாவசிய பொருட்களை இலவசமாக பெற்று வருகிறார்கள். இதைத்தவிர, ரேஷன் அட்டையின் மூலம் அரசு வழங்கும் பல்வேறு நலத் திட்டங்களையும் பெற்று வருகின்றனர்.

ஒரு பாக்கெட் 30 ரூபாய் இப்படிப்பட்ட சூழலில்தான், தமிழகத்திலேயே முதல்முறையாக புதுதிட்டம் கடந்த 2023ல் அறிமுகமானது. அதன்படி, கரூர் மாவட்டத்தில் குளித்தலை அருகே மகாதானபுரம் ரேஷன் கடைகளில், மகளிர் சுய உதவி குழு மூலம் தயாரிக்கப்பட்ட சானிட்டரி நாப்கின்கள் விற்பனை ஆரம்பமானது. “தோழி” என்று சானிட்டரி நாப்கின்களுக்கு பெயரிடப்பட்டுள்ளது. ஆறு நாப்கின்கள் அடங்கிய ஒரு பாக்கெட் ரூபாய் 30 விலையில் நியாய விலை கடையில் விற்பனை செய்யப்படுகிறது. இது வெளிசந்தையில் விற்பனை செய்யப்படுவதை விட 25 சதவீதம் விலை குறைவாகும்.. ரேஷன் அட்டைதாரர்கள் மட்டுமில்லாமல் மற்ற பெண்கள் அனைவரும் நியாய விலைக்கடைகளில் இந்த சுகாதார சானிட்டரி நாப்கினை வாங்கிச் செல்லலாம்... இதன் மூலம் பெண்கள் அதிக தரத்திலான சானிட்டரி நாப்கின்களை பயன்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், சென்னை, தாம்பரம் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் லட்சுமி ராஜா என்பவர் ஹைகோர்ட்டில் பொது நல மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.. சானிட்டரி நாப்கின்கள் அதில், “மாதவிடாய் காலங்களில், பெண்கள் சுகாதாரத்தை பேணுவது மிகவும் முக்கியமானது. சானிட்டரி நாப்கின்’களின் அதிக விலை காரணமாக, ஏழை பெண்களுக்கு ‘நாப்கின்’கள் கிடைக்காத காரணத்தால் கிராமப்புற பெண்களும், சுகாதார குறைவான மாற்று நடைமுறைகளை பின்பற்றி வருகின்றனர். பள்ளிகளில் இலவசமாக, நாப்கின்கள் வழங்க வேண்டும் என, அனைத்து மாநில அரசுகளுக்கும், உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதில் இருந்து, அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியும்.

ரேஷன் கடைகளில் சானிட்டரி நாப்கின் எனவே, தமிழகத்தில் ரேஷன் கடைகளில், ‘சானிட்டரி நாப்கின்களை இலவசமாகவோ, மானிய விலையிலோ வழங்கும் திட்டம் உள்ளதா என, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்தபோது, அதுபோல எந்த திட்டமும் இல்லை என, பதிலளிக்கப்பட்டது. அதனால், ஏழை மற்றும் கிராமப்புற பெண்கள் பயன் அடையும் வகையில், ரேஷன் கடைகளில், மானிய விலையிலோ அல்லது இலவசமாகவோ , சானிட்டரி நாப்கின்களை வழங்க உத்தரவிட வேண்டும்“ என்று கேட்டுக் கொண்டார். இந்த மனுவானது, தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுவுக்கு பதிலளிக்க, அரசு தரப்பில் கால அவகாசம் கோரப்பட்டது. 3 துறை செயலாளர் ஆஜராக உத்தரவு இதையடுத்து நீதிபதிகள், “ஏற்கனவே இறுதி அவகாசம் வழங்கியும், இதுவரை பதில் மனு தாக்கல் செய்யவில்லை. எனவே, டிசம்பர் 16ம் தேதிக்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், சமூக நலத் துறை, உணவுப் பொருள் வழங்கல் துறை மற்றும் சுகாதாரத் துறைகளின் செயலர்கள் நேரில் ஆஜராக நேரிடும்“ என்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளனர். பெண்களின் ஆரோக்கியத்தை நேரடியாக பாதிக்கும் சானிட்டரி நாப்கின்களின் தட்டுப்பாடு குறித்த இந்த வழக்கு மிகுந்த கவனத்தை பெற்று வருகிறது.. அத்துடன், பெண்களின் சுகாதார பாதுகாப்பு குறித்து அரசு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீண்டும் கவனத்திற்கு வந்துள்ளது.

## நம்ம மதுரையா இது.. ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை.. அடையாளம் தெரியாமல் மாறிய ரேஸ்கோர்ஸ் மைதானம்

மதுரை, நவ.20-

ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை தொடர் இன்னும் 8 நாட்களில் தொடங்க உள்ள நிலையில், மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானம் அடையாளம் தெரியாத அளவிற்கு மாறி இருக்கிறது. சர்வதேச தரத்திலான டர்ப் தொடங்கி வீரர்களுக்கான ஓய்வறை, பார்வையாளர்களுக்கான கேலரி, விஜபி கேலரி உள்ளிட்ட பணிகள் நிறைவடைந்துள்ளது.

14வது ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை ஹாக்கி போட்டிகள் நவம்பர் 28ஆம் தேதி முதல் டிசம்பர் 10ஆம் தேதி வரை நடக்கவுள்ளது. சென்னை மற்றும் மதுரை ஆகிய இரு நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தமாக உலகம் முழுவதும் இருந்து 24 நாடுகள் பங்கேற்கின்றன. இதனை சிறப்பாக நடத்த தமிழக அரசு தயாராகி வருகிறது.

ஏற்கனவே ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை தொடரில் பங்கேற்க உள்ள வீரர்கள் சென்னை வரத் தொடங்கியுள்ளனர். இதனிடையே மதுரையில் சர்வதேச தரத்தினாலான ஹாக்கி மைதானம் முழுவீச்சில் தயாராகி வருகிறது. இன்னும் 2 அல்லது 3 நாட்களில் மைதானத்தின் அத்தனை பணிகளும் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்பாக மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் ஹாக்கி மைதான அரங்குகள் இருந்தாலும், பார்வையாளர்களுக்கான கேலரி, வீரர்களுக்கான ஓய்வறை உள்ளிட்ட வசதிகள் செய்யப்படாமல் இருந்தது. தற்போது அந்த பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ளன. புதிய டர்ப், உடைமாற்றும் அறை, முதலுதவி அறை, ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கும் வகையில் கேலரி, விஜபி கேலரி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக மட்டும் ரூ.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றன. மதுரையில் இதுவரை 2 முறை தேசிய அளவிலான ஹாக்கி போட்டிகள் நடந்துள்ளன. முதல்முறையாக சர்வதேச அளவிலான ஹாக்கி போட்டிகள் நடக்க உள்ளதால், ரேஸ்கோர்ஸ் மைதானமே மொத்தமாக மாறி இருக்கிறது. இது மதுரை மாவட்ட விளையாட்டு வீரர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

அதேபோல் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை தொடர் நடப்பதை மக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் மதுரையின் பல்வேறு பகுதிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டது. மீனாட்சியம்மன் கோவில் தொடங்கி, விளக்கத்தூண், தெப்பக்குளம் என்று இளைஞர்கள், மாணவர்கள் அதிகளவில் கூடும் இடங்களில் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை காட்சிப்படுத்தப்பட்டது.

## மதுரை, கோவைக்கு மெட்ரோ ரயில் ஆடம்பரம் அல்ல.. அவசியம்“ மத்திய அரசுக்கு தங்கம் தென்னரசு கண்டனம்

சென்னை, நவ.20-

“கோவை, மதுரை நகரங்களுக்கு மெட்ரோ ரயில் என்பது ஆடம்பரம் அல்ல, அவசியமான உள்கட்டமைப்புத் தேவை. மத்திய அரசின் பாகுபாட்டை எதிர்த்து, தமிழ்நாட்டு மக்களின் நியாயமான உரிமைக்காகவும், எதிர்கால வளர்ச்சிக்காகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுப்பிய குரலுக்கு முழு ஆதரவு தருவோம்“ என நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தகுதியான நகரங்கள் கொண்ட பட்டியலை கடந்த 2011 ஆம் ஆண்டு மத்திய அரசு வெளியிட்டது. நாடு முழுவதும் உள்ள 19 இரண்டாம் நிலை நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை நிறைவேற்ற மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சகம் முடிவு செய்திருந்தது. புனே, கொச்சி, கோவை ஆகியவை இடம்பெற்றிருந்தன. கொச்சி மற்றும் புனேவில் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

கோவைக்கு மட்டும் கடந்த 14 வருடங்களாக மெட்ரோ ரயில் திட்டம் கானல் நீராகவே உள்ளது. எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த கடந்த 2017 ஆம் ஆண்டு கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார். 2021 தமிழ்நாடு பட்ஜெட்டில் ரூ.6,683 கோடி மதிப்பில் கோவை மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அறிவித்த நிதி ஒதுக்கப்படவில்லை. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வரப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார். இதையடுத்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. நீண்ட நாட்களாக ஒப்புதல் வழங்காமல் காத்திருப்பில் இருந்த நிலையில் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை மத்திய அரசு நிராகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது தமிழக மக்கள் மத்தியில் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

இந்நிலையில் இதுதொடர்பாக தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “மதுரையும், கோவையும் தமிழ்நாட்டின் பெருமைமிகு நகரங்கள். இவை இரண்டும் இந்தியாவின் வேகமாக வளரும் Tier-II நகரங்களில் முக்கியமானவை. இந்த நகரங்களுக்கு மெட்ரோ ரயில் என்பது ஆடம்பரம் அல்ல; அவசியமான உள்கட்டமைப்புத் தேவை. மக்கள் நெருக்கடியைக் குறைப்பது. பொருளாதாரத்தை மேம்படுத்துவது, என அனைத்துக்கும் மெட்ரோ இன்றியமையாதது.

மத்திய பாஜக அரசின் பாகுபாட்டை எதிர்த்து, தமிழ்நாடு மக்களின் நியாயமான உரிமைக்காகவும், எதிர்கால வளர்ச்சிக்காகவும் மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை வழங்கக் கோரி தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய குரலுக்கு முழு ஆதரவு தெரிவிப்போம்“ எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கோவை வரும் பிரதமருக்கு எதிர்ப்பு: விவசாயிகள், மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தினர் போராட்டத்தால் பரபரப்பு





கோவை, நவ.20-

பிரதமர் மோடி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கோவையில் மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தினர் போராட்டம் நடத்தி வருவதால் பரபரப்பு நிலவி வருகிறது. மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்தை ஒன்றிய அரசு நேற்று நிராகரித்தது. கோவை கொடிசியாவில் தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி இன்று கோவைக்கு வருகை தருகிறார். வேளாண் மாநாட்டில் பங்கேற்க கோவை வரும் பிரதமர் மோடிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து கோவையில் மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தினர் போராட்டம் நடத்தி வருவதால் பரபரப்பு நிலவி வருகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கோவைக்கு பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு துரோகம் செய்துவிட்டது. கோவையின் வளர்ச்சியை தடை செய்துவிட்டு கோவையில் மோடிக்கு என்ன வேலை? கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்காதே என்றும், உடனடியாக அனுமதி தர வேண்டும் என்று போராட்டக்காரர்கள் முழக்கம் எழுப்பினர்.

அதேபோல வேளாண் மாநாட்டை புறக்கணித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மோடியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கோவையில் விவசாயிகள் கருப்புக் கொடி ஏந்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். இயற்கை வேளாண்மைக்கு முற்றிலும் எதிரான மரபணு மாற்றப்பட்ட நெல் விதிகளை இறக்குமதி செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இயற்கை விவசாயத்துக்கு மானியம் இல்லை. மரபணு விதைகளை இறக்குமதி செய்ய டெல்லியில் ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்துவிட்டு வேளாண் மாநாடு நடத்துவதற்கு விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## ஆந்திர வனப்பகுதியில் 7 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொலை



அமராவதி, நவ.20-

ஆந்திரப் பிரதேசத்தின் மாரேடுமில்லி காடுகளில் பதுங்கியிருந்த மாவோயிஸ்டுகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் 7 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர். கடந்த 24 மணி நேரத்தில் ஆந்திராவில் நடந்த இரண்டாவது துப்பாக்கிச்சூடு இது.

இந்த துப்பாக்கிச்சூடு தொடர்பாக விஜயவாடாவில் செய்தியாளர்களிடம் பேசிய கூடுதல் டிஜிபி மகேஷ் சந்திர லத்தா, “ஆந்திரப் பிரதேசத்தின் அல்லூரி சீதாராம ராஜு மாவட்டத்தில் உள்ள மாரேடுமில்லி காடுகளில், தடைசெய்யப்பட்ட சிபிஜ (மாவோயிஸ்ட்) இயக்கத்தைச் சேர்ந்த மாவோயிஸ்டுகள் பதுங்கி இருப்பது குறித்து தகவல் கிடைத்தது. இதையடுத்து, நேற்று நடைபெற்ற தேடுதல் வேட்டையின்போது, மாவோயிஸ்ட் அமைப்பின் முக்கிய தலைவர் மாத்வி ஹித்மா அவரது மனைவி மதகம் ராஜே உள்ளிட்ட 6 பேர் கொல்லப்பட்டனர். இந்த மோதலின்போது சில மாவோயிஸ்டுகள் தப்பிவிட்டனர்.

இந்நிலையில், தொடர்ந்து நடைபெற்ற தேடுதல் வேட்டையின்போது இன்று காலை 7 மணி அளவில் நடைபெற்ற மோதலில், 7 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர். இவர்களில், 3 பேர் பெண் மாவோயிஸ்டுகள், 4 பேர் ஆண் மாவோயிஸ்டுகள்.

சிபிஜ (மாவோயிஸ்ட்) அமைப்பின் ஆந்திர ஒடிசா எல்லை பகுதிக்கான மத்தியக் குழு பொறுப்பாளரான டெக் சங்கர் என அழைக்கப்படும் மேட்டூரி ஜோகா ராவ் இந்த மோதலில் கொல்லப்பட்டார். இவர் தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவராக இருந்துள்ளார். மற்றவர்கள் குறித்து அடையாளம் காணப்பட்டு வருகிறது. தொடர்ந்து அங்கு தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.” என தெரிவித்தார்.

# கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமையை மிஸ் பண்ணிடாதீங்க... மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு இதை பண்ணுங்க



மிகவும் சிறப்பு வாய்ந்த, சக்தி வாய்ந்த விரதம் உமா மகேஸ்வர விரதமாகும். வாழ்க்கை சந்தோஷமாக அமைய வேண்டும் என விரும்புபவர்கள் கடைபிடிக்க வேண்டிய விரதம் உமா மகேஸ்வர விரதம். வாழ்க்கையை சுபிட்சமாக மாற்றக் கூடிய இந்த விரதத்தை எப்படி கடைபிடிக்க வேண்டும், எப்படி வழிபட்டால் முழு பலனும் கிடைக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

கார்த்திகை மாதத்தில் வரும் ஒவ்வொரு விரதங்களும் ஒவ்வொரு விதமான பலன்களை தரக் கூடிய சிறப்புமிக்கதாகும். கார்த்திகை மாதத்தில் வரும் திங்கட்கிழமையான கார்த்திகை சோமவார விரதம், பௌர்ணமி, அமாவாசை ஆகிய விரத நாட்கள் ஆகிய நாட்கள் எவ்வளவு சிறப்புமிக்கவையோ, அதே போல் கார்த்திகை மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமையும் மிக முக்கியமான விரத நாளாகும். கார்த்திகை மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமையில் இருக்கக் கூடிய விரதத்திற்கு உமா மகேஸ்வர விரதம் என்று பெயர். பிரிந்த தம்பதிகளை ஒன்று சேர்க்கக் கூடிய மிக உன்னதமான விரதம் உமா மகேஸ்வர விரதமாகும். ஏற்கனவே சேர்ந்து இருந்த தம்பதிகளின் வாழ்க்கையில் இல்லறம் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும்.

பொதுவாக உமா மகேஸ்வர விரதம் என்பது புரட்டாசி மாத பௌர்ணமியில் கடைபிடிக்கக் கூடிய விரதமாகும். அப்படி புரட்டாசி மாத பௌர்ணமியில் சிவன், பார்வதி இணைந்து இருக்கக் கூடிய உமா மகேஸ்வரர் சிலையை வைத்து வழிபட வேண்டும். புரட்டாசி மாதத்தில் இந்த விரதத்தை கடைபிடித்தால் தொடர்ந்து 16 வருடங்கள் கடைபிடிக்க வேண்டும். 16 வருடங்களுக்கு பிறகு வீட்டில் வைத்து வழிபட்ட உமா மகேஸ்வரர் சிலையை ஏதாவது ஒரு சிவன் கோவிலுக்கு எடுத்துச் சென்று கொடுத்து விட வேண்டும் என்று சாஸ்திர முறைகள் சொல்கிறது. ஆனால் இப்படி 16 வருடங்கள் தொடர்ந்து அனைவராலும் உமா மகேஸ்வர விரதத்தை கடைபிடிக்க முடியாது.

அதனால் தான் உமா மகேஸ்வர விரதத்திற்கு இணையான பலனை தரும் விரதத்தை ஒவ்வொரு மாதத்திலும் குறிப்பிட்டு சொல்லி வைத்தார்கள். அப்படி கார்த்திகை மாதத்தில் வரும் அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் உமா மகேஸ்வர விரதத்தை கடைபிடிக்கலாம். கார்த்திகை பௌர்ணமி தினமான திருக்கார்த்திகை தீபத் திருவிழா அன்றும் இந்த விரதத்தை கடைபிடிக்கலாம். உமா மகேஸ்வர விரதத்தை கடைபிடித்து தான் மகாவிஷ்ணுவே, மகாலட்சுமியுடன் மீண்டும் இணைந்ததாக புராணங்கள் சொல்கின்றன. சக்தி இல்லையேல் சிவன் இல்லை, சிவன் இல்லையேல் சக்தி இல்லை என்பார்கள். அது போல் கணவன்மனைவி எப்போதும் ஒற்றுமையாக இருப்பதற்கு இந்த விரதத்தை கடைபிடிக்கலாம்.

பிரிந்து இருக்கும் கணவன்மனைவி மீண்டும் ஒன்று சேர, தம்பதிகளுக்குள் அடிக்கடி சண்டை ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமையும் நிலைத்திருக்கவும், கணவன்மனைவி ஒற்றுமை பலமாகவும், இல்லறம் மகிழ்ச்சியாகவும் இருக்க கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமையில் உமா மகேஸ்வர விரதத்தை கடைபிடிக்கலாம். கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகளில் காலையில் எழுந்து குளித்து விட்டு, சிவன்பார்வதி இணைந்து இருக்கும் சிலை அல்லது படத்தை சிவப்பு நிற வஸ்திரம் விரித்த மேடையில் வைத்து, வாசனை மலர்களால் அலங்கரித்து, தீபம் ஏற்றி வைத்து, சிவன்பார்வதி மந்திரங்கள், சிவ புராணம் சொல்லி வழிபட வேண்டும்.

சிவன் பார்வதி படத்திற்கு முன்பு ஒரு சிவப்பு கயிறை வைத்து, அதிரசம், பால் பழம் ஆகியவை நைவேத்தியமாக படைத்து வழிபட வேண்டும். அன்று முழுவதும் விரதம் கடைபிடிக்க வேண்டும். அன்றைய தினம் வயதான தம்பதிகளை வீட்டிற்கு அழைத்து உணவளித்து, அவர்களிடம் ஆசி பெற வேண்டும். தம்பதிகளாக இல்லை என்றால் யாராவது வயதானருக்கு உணவளித்து, ஆசி பெறலாம். பிறகு மாலையில் சிவன்பார்வதி படத்திற்கு முன் விளக்கேற்றி வைத்து, ஏதாவது நைவேத்தியம் படைத்து, சிவன் பார்வதியை மனதார நினைத்து வழிபட்டு, விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம்.

# விநாயகர் சதுர்த்தி அன்று தரிசிக்க வேண்டிய தமிழகத்தின் டாப் 10 விநாயகர் கோவில்கள்



விநாயகர் சதுர்த்தி அன்று வீட்டில் விநாயகர் சிலையை வாங்கி வந்த வழிபடுவதுடன், கோவிலும் சென்று விநாயகரை தரிசித்து, வழிபடுவது சிறப்பு. அப்படி செல்லும் போது தமிழகத்தின் புகழ்பெற்ற, மிகவும் சக்திவாய்ந்த கோவில்களாக கருதப்படும் விநாயகர் கோவில்களுக்கு சென்று வழிபடும் போது அதன் பலன் பல மடங்காக அதிகரித்து காணப்படும். விநாயகரின் அருளும் முழுவதுமாக கிடைக்கும். விநாயகர் சதுர்த்தி, விநாயகப் பெருமானின் அருளை பெறுவதற்குரிய அற்புதமான நாளாகும். இந்த நாளில் புகழ்பெற்ற, சிறப்புமிக்க விநாயகர் தலங்களுக்கு சென்று வழிபடுவதால் விநாயகரின் அருளை முழுவதுமாக பெற முடியும். விநாயகர் சதுர்த்தி அன்று தமிழகத்தில் அவசியம் சென்று வழிபட வேண்டிய புகழ்பெற்ற 10 விநாயகர் கோவில்களை பற்றி தெரிந்து கொள்ளலாம். வாய்ப்பு இருப்பவர்கள் இவற்றில் ஏதாவது ஒரு ஆலயத்திற்காவது சென்று வழிபடுவது சிறப்பு. விநாயகரின் அருளை முழுவதுமாக பெறவேண்டும் என நினைப்பவர்கள் இந்த தலங்களுக்கு சென்று வழிபடும், விநாயகர் சதுர்த்தி சிறப்பு வழிபாட்டில் கலந்து கொள்வதும் மறக்க முடியாத, மெய் சிலிர்க்கும் நிகழ்வாக இருக்கும்.

தமிழகத்தின் டாப் 10 விநாயகர் கோவில்கள் :

1. பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவில் தமிழகத்தில் உள்ள மிக பழமையான குகைக் கோவில்களில் பிள்ளையாபட்டி கற்பக விநாயகர் கோவிலும் ஒன்று. பக்தர்கள் வேண்டிய வரங்களை தரும் கற்க விருட்சமாக, கையில் சிவலிங்கத்தை ஏந்திய படி விநாயகர் மூலஸ்தானத்தில் காட்சி தரும் கோவில் இது.

2. மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவில் திருச்சி மலைக்கோட்டையின் மீது சிறிய சன்னதியில் விநாயகப் பெருமான் கோவில் கொண்டுள்ள தலம். தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தி அன்று மிகப் பெரிய கொலுக்கட்டை நைவேத்தியமாக படைக்கப்பட்டு, வழிபாடு நடத்தப்படும் கோவில்களில் இதுவும் ஒன்று.

3. ஈச்சனாரி விநாயகர் கோவில் கோவையில் அமைந்துள்ள மிகவும் புகழ்பெற்ற கோவில்களில் இதுவும் ஒன்று. கோவையில் அதிகமான பக்தர்கள் வந்து செல்லும் சக்தி வாய்ந்த கோவில்களில் ஒன்று ஈச்சனாரி விநாயகர் கோவில்.

4. மணக்குள விநாயகர் கோவில் தமிழக எல்லையில் புதுச்சேரியில் அமைந்துள்ள மிகவும் புகழ்பெற்ற கோவில்களில் ஒன்று மணக்குள விநாயகர் கோவில். மிக பழமையான வரலாற்றைக் கொண்ட இக்கோவில் அதிகமான பக்தர்கள் வந்து செல்லும் கோவில்களில் ஒன்றாக உள்ளது. இங்கு ஒரே ஆலயத்தில் 108 விநாயகர்களை தரிசிக்க முடியும்.

5. ஆதி விநாயகர் கோவில் திருவாரூரில் திலதர்ப்பணபுரிக்கு அருகில் முக்தீஸ்வரர் ஆலயத்தில் அமைந்துள்ள விநாயகர் துதிக்கை இல்லாமல், மனித முகத்துடன் காட்சி தருகிறார். அதனால் இவரை ஆதி விநாயகர் என்றும், நரமுக விநாயகர் என்றும் அழைக்கிறார்கள்.

6. முந்தி விநாயகர் கோவில் கோவையில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஆலயங்களில் இதுவும் ஒன்று. திராவிட கட்டிடக்கலை பாணியில் இக்கோவில் அமைந்துள்ளது.

7. முக்குறுணி விநாயகர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அம்மன் சன்னதிக்கு அருகில் 8 அடி உயரத்தில் அமைந்துள்ள முக்குறுணி விநாயகர், தமிழகத்தில் உள்ள மிகவும் புகழ்பெற்ற விநாயகர்களில் ஒருவர்.

8. மும்மூர்த்தி விநாயகர் கோவில் சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள மும்மூர்த்தி விநாயகர் கோவில் மிகவும் புகழ்பெற்ற கோவிலாகும். இங்குள்ள விநாயகர் மும்மூர்த்திகளாலும் வழிபடப்பட்ட மூர்த்தியாக கருதப்படுகிறார். இந்த தலத்தில் பல்வேறு தெய்வங்களும் சிவனை வழிபட்டதாக தல வரலாறு சொல்கிறது.

9. நவகிரக விநாயகர் கோவில் கும்பகோணத்தில் அமைந்துள்ளது நவகிரக விநாயகர் கோவில். இங்குள்ள விநாயகர், தனது திருமேனி யிலேயே ஒன்பது கிரகங்களையும் வைத்திருப்பதால் இவரை வழிபட்டால் நவகிரகங்களையும் வழிபட்ட பலன் கிடைப்பதுடன், நவகிரகங்களால் ஏற்பட்ட தோஷங்களும் விலகும் என சொல்லப்படுகிறது.

10.புலியகுளம் விநாயகர் கோவில் கோவை மாவட்டம் புலியகுளத்தில் அமைந்துள்ள முந்தி விநாயகர் கோவிலில் உள்ள விநாயகர் சிலை ஆசியாவிலேயே ஒரே கருங்கற் பாறையால் செய்யப்பட்ட மிகப் பெரிய விநாயகர் சிலையாக கருதப்படுகிறது. 19 அடி உயரம் கொண்ட இந்த விநாயகர் மிகவும் புகழ்பெற்றவர்.

# சுழற்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக சாய் சுதர்சன், துருவ் ஜுரெல் தீவிர பயிற்சி

தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிராக கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 124 ரன்கள் இலக்கைக்கூட எட்ட முடியாமல் 30 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இந்த ஆட்டத்தில் முற்றிலும் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக அமைக்கப்பட்ட ஆடுகளத்தில் இந்திய அணியின் பேட்ஸ்மேன்கள் தென் ஆப்பிரிக்க அணியின் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக திணறினார்கள். இதனால் இந்திய அணியின் ஆட்ட அணுகுமுறையும், கவுதம் கம்பீரின் பயிற்சி திட்டங்களும் விமர்சிக்கப்பட்டு வருகிறது.

போட்டியை 3 நாட்களில் முடிக்கும் வகையில் ஆடுகளங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன. இந்நிலையில் தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான கடைசி மற்றும் 2வது டெஸ்ட் போட்டி வரும் 22ம் தேதி குவாஹாட்டியில் தொடங்குகிறது.

இந்த போட்டியில் வெற்றி பெற்று தொடரை சமன் செய்ய வேண்டிய நெருக்கடி இந்திய அணிக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இந்திய அணி வீரர்கள் நேற்று 3 மணி நேரம் தீவிர பேட்டிங் மற்றும் பீல்டிங் பயிற்சியில் ஈடுபட்டனர். சாய் சுதர்சன், துருவ் ஜுரெல் ஆகியோர் கவுதம் கம்பீர் முன்னிலையில் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக பேட்டிங் பயிற்சி செய்தனர்.

அதுவும் முன்னங்காலில் கால்காப்பு அணியாமல் பேட்டிங் செய்தனர். சுழன்று வரும் பந்துகளுக்கு எதிராக தற்காப்பு ஆட்டம் மேற்கொள்ளும் போது கால்காப்பில் பந்தை வாங்காமல் இருப்பதற்காக இந்த முறை கையாளப்பட்டது. மேலும் இடது கை பேட்ஸ்மேன்கள் சுழற்பந்து வீச்சாளர்களின் கையைப் புரிந்துகொண்டு கால்களை நகர்த்தி விளையாடுவதில் உள்ள சிரமங்களை சரி செய்வதற்கும் வழிகள் தேடப்பட்டன.

சாய் சுதர்சன், முதல் டெஸ்ட் போட்டியில் சேர்க்கப்படவில்லை. குவாஹாட்டி போட்டியிலும் அவருக்கு விளையாடும் லெவனில் வாய்ப்பு கிடைக்குமா என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. எனினும் கழுத்து பகுதியில் காயம் அடைந்துள்ள ஷுப்மன் கில் களமிறங்க முடியாத நிலை உருவானால் சாய் சுதர்சனுக்கு வாய்ப்பு கிடைக்கக்கூடும்.

சுழற்பந்து வீச்சை தொடர்ந்து வேகப்பந்து வீச்சுக்கு எதிராகவும் சாய் சுதர்சன் பேட்டிங் செய்தார். ஆகாஷ் தீப் வீசிய பந்துகளில் பல முறை எட்ஜ் ஆனது. மேலும் வலை பயிற்சி பந்து வீச்சாளர்களுக்கு எதிராகவும் சாய் சுதர்சன் தடுமாறினார். இதைத் தொடர்ந்து கவுதம் கம்பீரும், பேட்டிங் பயிற்சியாளரான சிதான்ஷு கோட்டக்கும் சாய் சுதர்சனுக்கு ஆலோசனைகள் வழங்கினர்.

அதேவேளையில் துருவ் ஜுரெல், ரிவர்ஸ் ஸ்வீப் ஷாட்களில் அதிக கவனம் செலுத்தி பயிற்சியில் ஈடுபட்டார். அவருடன் ரவீந்திர ஜடேஜாவும் நீண்ட நேரம் பேட்டிங் செய்தார். இது ஒருபுறம் இருக்க நித்திஷ் குமார் ரெட்டி இந்தியா 'ஏ' அணியில் இருந்து விலகி, கொல்கத்தாவில் பயிற்சி பெற்று வரும் இந்திய அணியுடன் இணைந்துள்ளார்.

# 2வது சுற்றில் சாட்விக்-ஷிராக் ஜோடி




ஆஸ்திரேலிய ஓபன் பாட்மிண்டன் தொடரில் இந்தியாவின் சாட்விக் ஷிராக் ஜோடி 2வது சுற்றுக்கு முன்னேறியது.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி, சீன தைபேவின் சாங் கோசி, போ லிவேய் ஜோடியை எதிர்த்து விளையாடியது.

48 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் உலகத் தரவரிசையில் 3வது இடத்தில் உள்ள சாட்விக் ஷிராக் ஜோடி 25-23, 21-16 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 2வது சுற்றுக்கு முன்னேறியது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் ட்ரீசா ஜாலி, காயத்ரி கோபிசந்த் ஜோடி 10-21, 14-21 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் குசுமா, புஸ்பிதாசாரி ஜோடியிடம் தோல்வி அடைந்தது.

# கொல்கத்தாவில் இந்தியாவை வீழ்த்த உதவிய சுழற்பந்து வீச்சாளர் சைமன் ஹார்மருக்கு காயம்?



இந்திய அணி உடனான கொல்கத்தா டெஸ்ட் போட்டியில் தென் ஆப்பிரிக்க அணியின் வெற்றிக்கு உதவிய சுழற்பந்து வீச்சாளர் சைமன் ஹார்மர் காயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. இந்த சுற்றுப்பயணத்தில் இந்தியாவுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அந்த அணி தற்போது விளையாடி வருகிறது. இதில் கடந்த 14ம் தேதி கொல்கத்தாவில் தொடங்கிய முதல் டெஸ்ட் போட்டியில் 30 ரன்களில் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் தென் ஆப்பிரிக்க வீரர் சைமன் ஹார்மர் 8 விக்கெட்களை வீழ்த்தினார். இதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக அதிக டெஸ்ட் விக்கெட்களை வீழ்த்திய தென் ஆப்பிரிக்க சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இந்த போட்டியில் ஆட்ட நாயகன் விருதையும் அவர் வென்றார்.

இந்நிலையில், அவர் வலது தோள்பட்டையில் காயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதையடுத்து அவர் பரிசோதனைக்காக மருத்துமனைக்கு அழைத்து செல்லப்பட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள காயத்தின் தன்மை குறித்த விவரம் மருத்துவ அறிக்கையில் மட்டுமே தெரியவரும். அதை பொறுத்த இந்திய அணி உடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடுவது தொடர்பாக தென் ஆப்பிரிக்க அணி முடிவு செய்யும். முதல் போட்டியில் பீல்டிங் செய்த போது அவர் காயமடைந்தார்.

2வது டெஸ்ட் போட்டி வரும் 22ம் தேதி குவாஹாட்டியிலுள்ள பர்ஸாபரா கிரிக்கெட் மைதானத்தில் தொடங்கவுள்ளது. இதைத் தொடர்ந்து நவம்பர் 30ம் தேதி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரும், டிசம்பர் 9ம் தேதி முதல் 5 போட்டிகள் கொண்ட சர்வதேச டி20 தொடரும் நடைபெறவுள்ளன.




# கிணறு விமர்சனம்...

கோடை விடுமுறையில் தங்கள் ஊரில் உள்ள ஒரு கிணற்றில் குளித்துக்கொண்டிருக்கும் நான்கு சிறுவர்களை, அக்கிணற்றின் உரிமையாளர் வந்து அடித்து துரத்துகிறார். இதனால், சிறுவர்களில் ஒருவரான கனிஷ்குமாருக்கு, தங்கள் நிலத்தில் சொந்தமாக ஏன் கிணறு வெட்டக் கூடாது? என்ற யோசனை வருகிறது. ஆனால் அதற்கு கனிஷ்குமாரின் பாட்டி 'குடும்பத்திற்கு தண்ணியில் கண்டம் இருக்கிறது' என கூறி தடையாக இருக்கிறார். இதற்கு நடுவே அவரது மாமா, பாட்டியின் நிலத்தை விற்க குறியாக நிற்கிறார்.

சிறுவர்கள் இதற்கு மத்தியில் என்ன செய்கிறார்கள், நினைத்தபடி கிணறு வெட்டினார்களா? இல்லையா என்பது மீதி கதை.

கனிஷ்குமார், அஸ்வின், ஸ்ரீஹரிஹரன், மனோஜ் கண்ணன் ஆகிய நான்கு சிறுவர்களுமே தங்களது அருமையான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். குறிப்பாக பாட்டியிடம் சண்டை போடுவதும், குற்ற உணர்வில் அழுவதுமான இடங்களில் கனிஷ்குமார் தனியாக தெரிகிறார். கிளைக்கதையாக நடமாடும் பஞ்சர் கடையாக டிவிஎஸ் 50யில் வலம் வரும் விவேக் பிரசன்னா கவனிக்க வைக்கிறார்.

கிராமத்தின் அழகை சிறப்பாக காட்சிப்படுத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் கவுதம் வெங்கடேஷ். புவனேஷ் செல்வநேசன் ஃபீல் குட் இசையை கொடுக்க முயற்சி செய்திருக்கிறார். ஆனால், சில இடங்களில் இசைக்கும் காட்சிக்கும் சம்பந்தமில்லாமல் வாத்தியங்கள் தாளம் போட்டுக்கொண்டிருக்கிறது. எடிட்டர் கவுதம் ராஜ் கே.எஸ். கிளைமாக்ஸ் காட்சிகளுக்கு கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கலாம்.


ஒரு கிணற்றைச் சுற்றி கதையமைத்து குழந்தைகள் உலகத்தை காட்ட முற்பட்டிருக்கிறார் இயக்குனர் ஹரிகுமரன். சிறுவர்களை நன்றாக நடிக்க வைத்தவர், திரைக்கதையில் சற்று தடுமாறி இருக்கிறார். கொஞ்சம் மெதுவாக நகரும் சில காட்சிகள் படத்திற்கு மைனஸ். மொத்தத்தில் கிணறு உணர்ப்பூர்வமான ஒரு பயணம்.

# மூன்றாவது கணவரையும் பிரிந்தார் மீரா வாசுதேவன்

திரையுலகில் சமீபகாலமாக விவாகரத்து பெறுவது அதிகரித்து வருகிறது. அந்த வகையில் தற்போது பிரபல நடிகையும் தனது கணவரை விவாகரத்து செய்வதாக அறிவித்துள்ள முடிவு இணையதளத்தில் வைரலாகி வருகிறது.அறிவுமணி, ஜெர்ரி, கத்திக்கப்பல் உள்ளிட்ட தமிழ்ப் படங்களில் நடித்து பிரபலமானவர் நடிகை மீரா வாசுதேவன். இவர் தற்போது மூன்றாவது முறையாக விவாகரத்து முடிவை அறிவித்துள்ளார்.

மீரா வாசுதேவன், விஷால் அகர்வால் என்பவரை முதலில் 2005ம் ஆண்டு திருமணம் செய்தார். பின்னர் 2008ல் கருத்து வேறுபாடு காரணமாக அவரை பிரிந்தார். பின்னர் நடிகர் ஜான் கொக்கேனை 2012ம் ஆண்டு திருமணம் செய்தார். பின்னர் அவரிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அவரையும் 2016ம் ஆண்டு பிரிந்தார்.

இதையடுத்து டிவி தொடர் ஒளிப்பதிவாளரான விபின் என்பவரை 3வதாக திருமணம் செய்தார். இந்நிலையில் கருத்து வேறுபாட்டால் அவரையும் பிரிந்துள்ளதாக தற்போது மீரா அறிவித்துள்ளார். இதை அறிந்த ரசிகர்கள், 'உங்கள் திருமண வாழ்க்கை தோல்வியில் முடிவதை பார்க்கும்போது அதிர்ச்சியும் சோகமும் ஏற்படுகிறது' என கருத்து தெரிவித்துள்ளனர்.



# என்னை டார்கெட் பண்றாங்க: கயாடு லோஹர் குற்றச்சாட்டு



தெலுங்கு ஊடகம் ஒன்றிற்கு பேட்டி அளித்திருக்கும் கயாடு லோஹரிடம் தன் மீது எழும் விமர்சனங்கள் மற்றும் அவதூறுகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு பதிலளித்த அவர், "சோஷியல் மீடியாக்களில் என்னைப் பற்றி பரவும் அவதூறு கருத்துகள் மிகவும் வேதனை அளிக்கிறது.

ஒரு கண்ணியமான பின்னணியில் இருந்து வருபவள் நான், எந்த தவறும் செய்யாமல் கனவை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் என்னை ஏன் சிலர் டார்கெட் செய்கிறார்கள்? பின்னால் பேசுபவர்கள் பற்றி கவலைப்படவில்லை என்றாலும், ஆழ் மனதில் அது உறுத்திக் கொண்டே இருக்கும். இதனால் பல நாள் தூக்கம் இழந்தேன்'' என்றார் கயாடு லோஹர்.

# பல்லாவரத்தில் மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது



பல்லாவரம், நவ.20-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் பல்லாவரம் இனாயத் பேலஸில் மாவட்ட தலைவர் எஸ்கே.ஜாஹிர் உசேன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

செயல்வீரர்கள் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மமக மாநில துணை பொதுச்செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் அவர்கள் மற்றும் தமுமுக தலைமை நிர்வாக குழு உறுப்பினர் குணங்குடி ஆர்.எம்.அனிபா அவர்கள் கலந்து கொண்டனர்.

செயல்வீரர்கள் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் 01

1999 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட வணக்க வழிபாட்டு உரிமையை பாதுகாக்கும் நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்கவேண்டும் என இந்த செயல்வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது

தீர்மானம் 02

இந்திய தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள SIR வாக்காளர்கள் திருத்தச் சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றும் இந்த செயல்வீரர்கள் கூட்டம் கருதுகிறது தேர்தல் ஆணையம் ஒரு தலைப்பட்சமாக செயல்படுவதை இந்த செயல்வீரர்கள் கூட்டம் கண்டிக்கிறது.

தீர்மானம் 03

25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டு சிறையில் அடைபட்டு கிடக்கின்ற முஸ்லிம் அரசியல் சிறைவாசிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அரசை இந்த செயல்வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 04

தாம்பரம் கஸ்தூரிபாய் நகர் பள்ளிவாசல் உடைய அனுமதி கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்து இன்றுவரை அனுமதி வழங்காமல் இருப்பதை தலைவர் பேராசிரியர் அவர்கள் சட்டமன்ற கூட்ட தொடரில் தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்றதை இந்த செயல்வீரர்கள் கூட்டம் மூலம் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சி தலைவர் கவனத்திற்கு நினைவூட்டுகிறது. தாம்பரம் கஸ்தூரிபாய் நகர் பள்ளிவாசலுக்கு அனுமதி வழங்கும் படி இந்த செயல்வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 5

சுதந்திர போராட்ட தியாகி திராவிட இயக்கத்தின் உற்ற தோழர்,இஸ்லாமியர்களின் கண்ணியமிகு தலைவர் காயிதே மில்லத் அவர்கள் வாழ்ந்த குரோம்பேட்டையில் கண்ணியமிகு காயிதே மில்லத் என்று பெயர் கொண்டு முகப்பு நினைவு நுழைவாயில் வைக்கவேண்டும் என்று இந்த செயல்வீரர்கள் கூட்டம் கேட்டு கொள்கிறது.

குரோம்பேட்டையில் புதியதாக அமைக்கப்பட்டு திறக்கப்பட உள்ள சுரங்க பாதைக்கும் இருபுறம் உள்ள பேருந்து நிழற்கூடங்களுக்கும் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என இந்த செயல் வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட செயலாளர்கள் எம்.அப்துல் ரஹீம் பாருக் அஹமது, மாவட்ட பொருளாளர் எம்.சபிபுல்லா, யூ.ரஹ்மத்துல்லா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட துணை செயலாளர் ஏ.சௌக்கத் அலி வரவேற்புரை ஆற்றினார்.

மேலும் மாநில இளைஞர் அணி செயலாளர் எஸ்.தமீம்அன்சாரி, வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் எம்.முஜிபுர் ரஹ்மான், எம்டிஎஸ். மாநில பொருளாளர் ஏ.ஆசிக் ஹமீது, தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் ஏ.முகமது ஜமீல், மு.மாவட்டச் செயலாளர் இப்ராஹிம், எஸ்எம்ஐ.மண்டல செயலாளர் ஜெய்னுல் ஆபுதீன், மாவட்ட துணை செயலாளர்கள் பி.சாகுல் ஹமீது, கபீர் கான், என்.மன்சூர்அலிகான், அப்துல் காதர், ஜமால் ஆகியோர் கலந்து கொண்டார்கள். மாவட்ட துணை தலைவர் ஏஎன். அப்துல் ரஹ்மான் அவர்கள் நன்றி உரையாற்றினார்.


# பழனியில் த.வெ.க சார்பில் வ உ சி யின் நினைவு தினத்தை முன்னிட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது



திண்டுக்கல், நவ.20-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக வெற்றிக் கழக விஜய் உத்தரவின்படி கழக பொதுச்செயலாளர் ஆனந்த் வழிகாட்டுதலின்படி., திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கார்த்திக் ராஜன் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் பாலன், விஜய் சிவா, மற்றும் நகரச் செயலாளர் மிதுன் அவர்களின் முன்னிலையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பிரவீன் குமார் ஏற்பாட்டில் செக்கிழுத்த செம்மல் வ உ சி சிதம்பரனாரின் 59ஆவது நினைவு தினத்தை அன்னாரின் திருவுருவ படத்திற்கு மாலையிட்டு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது

அதனை தொடர்ந்து பழனி சட்ட மன்ற நகர் பகுதியில் இருந்து 50க்கும் மேற்பட்டோர் தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். மற்றும் இந்நிகழ்வில் நகரம் ஒன்றிய, மற்றும். மகளிர் அணி. சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் பேரூராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 கணக்கெடுப்பு படிவங்களை வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்டு பதிவேற்றம் செய்யும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், நேரில் பார்வையிட்டார்.





# கீழக்கோட்டையில் உலக கழிப்பறை தின கொண்டாட்டம்

காளையார் கோவில், நவ.20-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் முன்னெடுப்பில் சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக மகிழ்முற்ற மாணவ மாணவிகள் உலக கழிப்பறை தினத்தை கொண்டாடினர். பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்து மாறி வரும் உலகில் சுகாதாரம் பற்றி சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக் கியசாமி முன்னிலை வகித்தார். பட்டதாரி ஆசிரியர் கீதா வரவேற்றார். ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க நம் வீட்டை மட்டுமல்லாமல் நமது சுற்றுப்புறத்தையும் தூய்மையாக சுகாதாரமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று உலக கழிப்பறை தினத்தில் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். கழிப்பறை பயன்பாட்டால் மக்களின் சராசரி ஆயுள் காலம் 20 ஆண்டுகள் அதிகரித்துள்ளது. உலகில் கழிப்பறை வசதியுடன் வாழ்பவர்களை விட செல்போன்களை வைத்திருப்பவர்களே அதிகம். மனிதர்கள் தனது வாழ்நாளில் சராசரியாக 3 ஆண்டு கழிப்பறையில் கழிக்கிறார்கள். பொது கழிப்பறைகளின் கதவுகளில் உள்ள கைப்பிடியில் ஒரு சதுர அங்குல பரப்பில் சுமார் 40,000 கிருமிகள் இருக்கின்றன. சீனா ஸ்பெயின் போன்ற நாடுகளில் சில இடங்களில் நாய்களுக்கு கூட பொது கழிப்பறைகள் உள்ளன.



மகாத்மா காந்தியடிகளின் 150 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மத்திய அரசு ஐந்து ஆண்டுகளில் 10 கோடி கழிப்பறைகளை பொதுமக்களுக்கு கட்டிக் கொடுத்திருக்கின்றது. இதனால் சுமார் 55 கோடி மக்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை கைவிட்டுள்ளனர். மேலும் சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த 105 வயது மூதாட்டியான குன்வர்பாய் தான் வளர்த்து வந்த ஆடுகளை விற்று கழிப்பறை கட்டியதின் விளைவாகவும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள விரும்பியதால் மத்திய அரசு பாரத் அபியான் விருது வழங்கி பெருமைப்படுத்தியது என்றும் 2013 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 19ஆம் தேதியை உலக கழிப்பறை தினமாக ஐநா அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது. கழிப்பறை சுகாதாரத்தின் முக்கியத்துவத்தையும் அது தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதுதான் இந்த தினத்தினுடைய முக்கிய நோக்கம் என்று தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி விரிவாக எடுத்துரைத்தார். கழிப்பறை வசதியும் மனித உரிமையே! அதை கொடுக்க வேண்டியது அரசின் கடமையே!! முகத்தை மூடுவதில் அக்கறை காட்டும் பெண்கள் திறந்த வெளியில் மட்டும் மலம் கழிக்கின்றார்களே? துணிச்சல் மிகுந்த திருவாளர் சாகசக்காரரே. குதிரை விட்டுவிட்டு கழிப்பறையை பயன்படுத்துங்கள். விழித்திடுக! விரைந்திடுக!! பயன் பெற்றிடுக! சுகாதாரம் பேணிடுக!! என விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பினார்கள். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார் ஆசிரியை கமலம்பாய் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர் கஸ்தூரி சத்துணவு உதவியாளர் அஞ்சலை காலை சிற்றுண்டி பொறுப்பாளர் பஞ்சவர்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தலைமுடி உதிர்வால் மன வருத்தத்தில் இருந்த இளம்பெண் தற்கொலை



கன்னியாகுமரி, நவ.20-

கன்னியாகுமரி மாவட்டம் தென்தாமரைக்குளம் கீழச்சாலை பகுதியில் வசித்து வந்த தங்கச்சாமி அவர்களின் இரண்டாவது மகள் ஐஸ்வர்யா (27), BSc பட்டதாரி. கடந்த மூன்று ஆண்டுகளாக தலைமுடி அதிகமாக உதிர்ந்து வந்ததால் இவர் தீவிரமான மன உளைச்சலில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

தான் உயிரோடு இருப்பதை விட சாவது மேல் என்று அடிக்கடி மன வேதனையை வெளிப்படுத்தி வந்ததாக குடும்பத்தார் தெரிவித்தனர். இந்நிலையில், வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில், ஐஸ்வர்யா மின்விசிறியில் தூக்குபோட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இந்த சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து தென்தாமரைக்குளம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



■ சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் சீனிவாசன் இடம் மருத்துவ பயனாளர்களின் நலனுக்காக இரண்டு எண்ணிக்கை வீல் சேர்களை நமது அரிமா சங்க முன்னாள் தலைவர் லயன் செய்யது தனது தந்தை ஏ எம் முகமது ரபிக் நினைவாக வழங்கிய நிகழ்வில் நமது அரிமாக்களுடன் கலந்து கொண்ட நிகழ்வு. நிகழ்வின் போது மருத்துவக் கல்லூரி முதல்வர் அவர்கள் அரிமா சங்கத்தினையும் நன்கொடை வழங்கிய மகாராணி செய்யது அவர்களையும் வெகுவாக பாராட்டினார்கள். நிகழ்வினை ஒருங்கிணைத்த லயன் சங்க தலைவர் ரமேஷ் கண்ணன் அவர்களுடன் வட்டார தலைவர் முத்துராஜா லயன் சங்க செயலாளர் துரை பாண்டியன் முன்னாள் லயன் சங்க தலைவர் முத்துக்குமரன் லயன் சங்க உறுப்பினர் சிங்காரவேலன் ஆகியோர் கலந்து கொண்டனர்



■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் திருப்புகழ் பஜனை குழுவினர் உலக நன்மை வேண்டி பெருமாள் மலை கல்யாண சுப்பிரமணியர் திருக்கோவிலில் வேல் வழிபாடு மற்றும் வேல் மாறல் பாராயணம் செய்தனர்

# கிளவுட் நைட் தனியார் மருத்துவமனையில் பிரசவத்தின்போது நிகழ்ந்த சோகம் பெற்றோர்கள் புகார்

## குழந்தைப் பிரசவத்தில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக, குழந்தை கோமா நிலைக்குச் சென்றுள்ளதாகப் பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்




துரைப்பாக்கம், நவ.20-

சென்னை ஓ.எம்.ஆர். சாலை, நாவலூரைச் சேர்ந்த சங்கரநாராயணன் தங்கம் தம்பதியினரின் இவர்களுக்கு 2023 ஆண்டு திருமணம் நடைபெற்றது தம்பதியினருக்கு இரண்டு ஆண்டுகள் குழந்தை இல்லாத நிலையில் தங்கம் மார்ச் மாதம் கர்ப்பம் தரித்துள்ளார் கர்ப்பம் தரித்த நாள் முதல் ஓ.எம்.ஆர். சாலை துரைப்பாக்கத்தில் உள்ள கிளவுட் நைட் (Cloud Nine) என்ற தனியார் மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்டு வந்துள்ளனர்.

கடந்த நவம்பர் 7ம் தேதி வழக்கமான பரிசோதனைக்குச் சென்றபோது, தங்கத்திற்குப் பனிக்குட நீர் குறைந்துள்ளதால், அன்றிரவே பிரசவ வலி ஏற்படும் எனக் கூறி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பனிக்குட நீர் குறைந்த நிலையில், அறுவை சிகிச்ச மூலம் பிரசவம் மேற்கொள்ளாமல், அவருக்குச் சுகப்பிரசவம் செய்ய மருத்துவர்கள் முயற்சி செய்ததாகப் பெற்றோர் குற்றம் சாட்டுகின்றனர். கணவர் சங்கரநாராயணன் முன்னிலையில் நடைபெற்ற பிரசவத்தின்போது, குழந்தை வெளியேறும் தருவாயில், குழந்தையை வெளியே எடுக்க வேக்கம் கருவியைப் பயன்படுத்த முயன்றுள்ளனர். அப்போது, அந்தக் கருவி உடைந்து கீழே விழுந்ததாகக் கூறப்படுகிறது.

பிரசவத்திற்குப் பின் குழந்தை எந்த அசைவும் இன்றி இருந்ததால், குழந்தைக்குச் சுவாசப் பிரச்னை சிக்கல் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறி வென்டிலேட்டர் அறைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

மறுநாள் காலையில், குழந்தையின் நிலை குறித்து தந்தை கேட்டபோது, குழந்தை கோமா நிலைக்குச் சென்றுள்ளதாகவும், வென்டிலேட்டரில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கர்ப்பம் தரித்த நாள் முதல் அனைத்துப் பரிசோதனைகளிலும் அறிக்கைகள் சாதாரணமாக இருந்த நிலையில், தற்போது குழந்தை கோமா நிலை எனக் கூறுவது ஏன் எனத் தந்தை கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு எந்த பதிலும் அளிக்காமல் மருத்துவம் நிர்வாகம் இருந்துள்ளது

நவம்பர் 7ம் தேதி பிறந்த குழந்தை தற்போது வரை வென்டிலேட்டரிலேயே உள்ளது. குழந்தையின் தாய்ப்பாலை டியூப் மூலம் செலுத்தி வருகின்றனர்

பிரசவம் நடந்த மூன்றாம் நாள் தங்கம் டிசாஸ்ட் செய்துள்ளனர் இருப்பினும் குழந்தை மட்டும் வெண்டிலேட்டில் உதவியுடன் கடந்த 12 நாட்களாக சிகிச்சை பெற்று வருகிறது

பிரசவத்துக்காக இதுவரை சுமார் 6 லட்சம் ரூபாய் கட்டணம் செலுத்திய நிலையில், குழந்தையின் நிலை என்ன என்று கூட முறையாகப் பதிலளிக்காமல், கூடுதலாக 2 லட்சம் ரூபாய் செலுத்தும்படி மருத்துவமனை நிர்வாகம் வலியுறுத்துவதாகப் பெற்றோர் புகார் அளித்துள்ளனர்.

பனிக்குட நீர் குறைந்த நிலையிலும் அறுவை சிகிச்சை செய்யாமல் சுகப்பிரசவத்துக்கு முயற்சித்தது, மேலும் பிரசவத்தின்போது வேக்கம் கருவி உடைந்ததன் காரணமாகவே குழந்தைக்கு இந்தக் கோமா நிலை ஏற்பட்டிருக்கலாம் எனப் பெற்றோர் சங்கரநாராயணன் தங்கம் தம்பதியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுகுறித்து மருத்துவ நிர்வாகம் முறையாகப் பதிலளிக்காமல் குழந்தையை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை மேற்கொள்ளுமாறு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் என அலட்சியமாக பதில் அளித்ததாக கூறப்படுகின்றது, இதனால் குழந்தைத் தந்தை சங்கரநாராயணன் துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

மேலும், நீதி கேட்டு முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் மெடிக்கல் கவுன்சிலிலும் பெற்றோர் புகார் அளித்துள்ளனர்.

இது குறித்து மருத்துவமனை நிர்வா கத்திடம் கேட்டபொழுது உயர் அதிகாரியில் ஆலோசனை இல்லாமல் பதில் அளிக்க முடியாது என தெரிவித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161